[பேரவைத் தலைவர்] [2024 ஜுன் 20

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, செவ்வனே பணியாற்றினார்கள்.

திரு. மொ. பரமசிவம் அவர்கள் 1977–1980 ஆம் ஆண்டுகளில் வானூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறப்பாகப் பணியாற்றினார்கள்.

திரு. சி. இராமநாதன் அவர்கள் 1977–1980 ஆம் ஆண்டுகளில் விருத்தாசலம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, பாராட்டத்தக்க வகையில் பணியாற்றினார்கள்.

இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால், அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. இரங்கல் தீர்மானங்கள்

(அ) குவைத் நாடு, தீ விபத்தில் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஏழு பேர் உயிரிழந்தது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குவைத் நாட்டின் மங்காப் என்ற இடத்தில் தொழிலாளர்கள் தங்கியிருந்த கட்டடத்தில் 12–6–2024 அன்று ஏற்பட்ட தீ விபத்தில் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஏழு பேர் உள்ளிட்ட சிலர் உயிரிழந்தது குறித்தும், படுகாயமடைந்தது குறித்தும் இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

உயிரிழந்தவர்களின் உடல்களை தமிழ்நாட்டிற்கு உடனடியாகக் கொண்டுவர மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டு, உரிய துரித நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளார்கள்.

இக்கொடிய விபத்தில் உயிரிழந்தவர்களை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்வதோடு, காயமுற்று மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்கள் விரைவில் குணமடைய வேண்டுமென்ற விழைவை இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது.

(ஆ) கள்ளக்குறிச்சி மாவட்டம், இரசாயனம் கலந்த சாராயம் அருந்தி முப்பதுக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் இரசாயனம் கலந்த சாராயம் அருந்தியதன் காரணமாக 30-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்த செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.*

சமூகத்தைப் பாழ்படுத்தும் இத்தகைய குற்றங்களை இரும்புக்கரம் கொண்டு அடக்கப்படுகின்ற வகையில் கடுமையான நடவடிக்கை எடுக்கவும், இத்தகைய நிகழ்வில் பாதிக்கப்பட்ட நபர்களுக்குத் தேவையான மருத்துவ உதவிகளை உடனடியாகச் செய்வதற்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இந்நிகழ்வில் உயிரிழந்தவர்களை இழந்துவாடும் அவர்தம் குடும்பத்தினருக்கு இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தினையும் தெரிவித்துக்கொள்கிறது.

இந்த இரங்கல் தீர்மானங்களை நிறைவேற்றும் முகத்தானும், இத்துயர சம்பவங்களில் மறைந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.)

(இ) திரு. நா. புகழேந்தி, சட்டமன்றப் பேரவை உறுப்பினர் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2021 ஆம் ஆண்டு விக்கிரவாண்டி தொகுதியிலிருந்து பதினாறாவது சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு திறம்படப் பணியாற்றிய*